திருக்கோவில் பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 13 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஒக்தோபர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திருக்கோவில் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமார்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா.8,500 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நூலகத்திற்கு சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி ரூபா 169,043 ஆகக்காணப்பட்ட போதிலும் கணக்குகளில் ரூபா 54,746 என காட்டப்பட்டுள்ளதால் சொத்தின் பெறுமதி ரூபா 114,297 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தினால் சபைக்கு இருபது புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்து கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை.

(ஈ) சேதனப்பயளை இருப்புப் பதிவேட்டின் பிரகாரம், 3,795 சேதனப்பயளை பைகள் ரூபா.7,21,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக காட்டப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுகளில் சேதனப்பயளை விற்பனை வருமானமாக ரூபா 162,000 மட்டுமே காட்டப்பட்டுள்ளது. ஆகவே சேதனப் பசளை விற்பனை வருமானம் ரூபா.559,000 தொகையால் நிதிக்கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டில் ரூபா.151,190 தொகையான சேதனப் பசளை கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட போதிலும் அது கடன்பட்டோர் கணக்கில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

(அ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா. 270,941 தொகையினை இனங்கண்டு அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மார்ச் 19ஆந் திகதி திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்ட நோக்கத்திற்காக சபையின் தவிசாளரால் முற்பணமாக பெறப்பட்ட ரூபா 20,000 தொகை கணக்காய்வு திகதியான 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபையின் செயலாளரினால் சில்லறை செலவுக்காக முற்பணமாக பெறப்பட்ட ரூபா 5,000 தொகை 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.5 ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 126,013,965 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| தளபாடங்களும் மற்றும் பொருத்துக்களும் | 1,468,600 | |
| வாகனங்களும் வண்டிகளும் | 55,224 | |
| பெறித்தொகுதியும் இயந்திரங்களும் | 2,425,198 | |

1.3.6 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 180 | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைவைப்பு பெற்றுக் கொள்ளப்படவில்லை. |
| நிதிப் பிரமாணம் 1647 | வாகனங்களின் இலக்கம், வர்க்கம், பெறப்பட்ட திகதி, எரிபொருள் வகை போன்ற விபரங்களை உள்ளடக்கியதான வாகனத்தின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 09 கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான கணனிப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) 2014 திசெம்பர் 26ஆம் திகதிய 08/2014ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைக் கடிதம். | மீளாய்வாண்டில் சபையினால் 16 மோட்டார் வாகனங்களுக்காக காப்புறுதி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 711,495 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,532,256ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 820,761 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகளை கணிப்பீடு செய்து அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனையவைகள்

-------------------

(அ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய நாளாந்த பொதுச் சந்தை குத்தகை நிலுவை ரூபா 141,000 தொகையும் வார இறுதி பொதுச் சந்தை குத்தகை நிலுவை ரூபா 94,870 தொகையும் ஏனைய குத்தகை நிலுவை ரூபா 517,660 தொகையும் கடைத் தொகுதிக் கடைகளுக்கான வாடகை நிலுவை ரூபா 915,515 உள்ளடங்களாக ரூபா 1,669,045 கூட்டு மொத்த தொகையான அறவிட வேண்டிய நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளோ சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகார பரப்பிற்குள் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 07 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான உரிமைக் கட்டணம் அறவிடுவதற்கான உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபை வருடாந்தம் அண்ணளவாக ரூபா 140,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 14 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிட முடியாது போய்விட்டது. இதனால் சபை வருடாந்தம் ரூபா 60,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

-------------------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டுக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 2,865,230 தொகையினை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 02 வரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையான ரூபா 1,490,233 பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 02 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

------------------------------

(அ) சபையில் கடமையாற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டு பொது வைப்பு கணக்கிலிருந்து வழங்கப்பட்ட சம்பள முற்பணம் ரூபா 42,347 தொகையை 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001/15 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 25 க்கு மேற்பட்ட அலுவலகர்களைக் கொண்டுள்ள அலுவலகங்களின் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 59 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற பிரதேச சபையால் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை.

(இ) 2012 நவம்பர் தொடக்கம் 2013 பெப்ரவரி வரையான காலப்பகுதிக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு செலுத்தவேண்டிய நிதி ரூபா 16,933 உரிய காலப்பகுதியில் செலுத்தத் தவறியதன் விளைவாக தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திற்காக ரூபா 6,846 தண்டப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) முற்பணங்களின் அறவீடு